**OS.No**. 250/2017

**DW** 1- கோவிந்தராஜ் த/பெ. வெங்கடபதி

நாள். 27.02.2023

<u>பிரதிவாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் ரூ77 லட்சம் சிறிது சிறிதாக பணம் முதலீடு செய்ததாக சொல்லியுள்ளேன் எந்த எந்த வருடம் எந்த மாதம் எந்த தேதி என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். என்னுடைய பிரமாண வாக்கு மூலத்தில் நான் 3ம்பிரதிவாதி நிறுவனத்தின் கூட்டாண்மை ஒப்பந்த பத்திரத்தை மோசடியாக உருவாக்கி 16.4.2008ல் திருப்பூர் தொழில் நிறுவன மையத்தில்பதிவு செய்து பதிவு எண் 518 யை வாதிகள் பெற்றுள்ளனர் என கூறியிருப்பது பொய் என்றால் சரியல்ல. நானும் 1ம் பிரதிவாதியும் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் இது சம்மந்தமான வாதுரையை தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன்.

2. நானும் எனது மனைவி 1ம் வாதியும் 3ம் வாதியுடன் சேர்ந்த அசல் வழக்கு எண் 470/18 யை தாக்கல் செய்துள்ளோம் என்றால் ஆமாம். அதில் என்ன பரிகாரம் கோரியுள்ளது தெரியும் என்றால் ஆமாம். அசல் வழக்கு எண் 470/18 ல் பிராதில் என்னுடன் 6 பேர் சேர்ந்து மேற்படி வழக்கின் 3ம் வாதி கூட்டாண்மை நிறுவனத்தை ஆரபித்தாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். 1.2.2008 க்கு முன்பு 3ம் பிரதிவாதி பெயரில் தொழில் நடந்ததாக கூறும் நான் அந்த காலகட்டத்தில் நடந்த தொழில் நடவடிக்கைகள் அல்லது தொழில் உரிமம் குறித்தோ தொழிலாளர் எண்ணிக்கை குறித்தோ என்னுடைய எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன்.

3. 1.2.2008 க்கு முன்புக்கான நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் அவ்வாறு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

4. வாதிகள் முன்பே திட்டமிட்டு 3ம் பிரதிவாதி நிறுவனத்திற்காக அவர்களுடைய நண்பரான சேது சுப்பிரமணியம் என்பவரை ஆடிட்டராக நியமித்து இருப்பதாக சொல்லியிருப்பது பொய்யானது என்றால் சரியல்ல. 1ம் வாதி 3ம் பிரதிவாதி

நிறுவனத்தின் பங்குதாரர் என்றாலும் 1ம் பிரதிவாதி மற்றொரு பங்குதாரர் என்றாலும் சரிதான். 1ம் பிரதிவாதியின் ஒப்பதலுடன் தான் 1ம் வாதி 31.3.2012 வரைக்கான வருமான வரி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதில் 1ம் வாதி மட்டும் தான் கையெழுத்து செய்துள்ளார். 2009 ல் நானும் எனது மனைவியும் இந்திராணி மற்றும் செல்வகுமார் எஸ்.பி.ஐ வங்கியில் ரூ97 லட்சம் கடனாக பெற்று 3ம் பிரதிவாதி நிறுவனத்தில் முதலீடு செய்ததாக பிரமாண வாக்கு மூலத்தில் சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல.

5. 2009 ல் 3ம் பிரதிவாதியின் கூட்டாண்மை நிறுவனத்திற்காக நானும் எனது மனைவியும் இந்திராணி மற்றும் செல்வகுமாரும் 2ம் வாதி சேர்ந்து அவர் அவர்கள் சொத்து பத்திரத்தை பிணையமாக வைத்து 3ம் பிரதிவாதி நிறுவனத்தின் பெயரில் ரூ97 லட்சம் கடன் பெற்றுள்ளோம் என்றால் சரிதான். ஒரு கூட்டாண்மை நிறுவனத்தை பொறுத்த வரை ஒவ்வொரு பங்குதாரரும் மேற்படி நிறுவனத்தின் முதலாளியும் முகவரும் ஆவர் என்றால் அது பற்றி தெரியவில்லை. எனவே 2013 ஆகஸ்டில் வாதிகளை அனுகி 3ம் பிரதிவாதி நிறுவனத்தின் பங்குதாரர் என்ற முறையில் 1ம் பிரதிவாதி லாபம் பங்கினை கேட்டக வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

6. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ 5 ல் யார் யாருக்கு எழுதிய புகார் என்றால் அதில் நான் காவல் துறைக்கு உயர் அதிகாருக்கு அளித்ததாக உள்ளது ஆனால் நான் அவ்வாறு புகார் எதுவும் கொடுக்கவில்லை. 2.1.2014 நான் தான் தெற்கு காவல் நிலைய காவல் ஆய்வாளருக்கு புகார் கொடுத்துள்ளேன் என்றாலம் தற்போது கொடுக்கவில்லை என வழக்கிற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ 5 ஆனது தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்ட போது எனது தரப்பிலோ எனது வழக்கறிஞர் தரப்பிலோ ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் ஆமாம். வா.த.சா.ஆ 5 யை ஏற்றுக்கொண்டால் ஆகஸ்ட் 2013 ல் நானும் 1ம் பிரதிவாதியும் வாதிகளை அனுகியதாக சொல்லியிருப்பது பொய் ஆகிவிடும் என்பதற்காக வேண்டுமென்றே மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

7. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ 6 ன் கீழ் நான் 24.3.2014 ல் நான் காவல் துறை ஆணையாளருக்கு அளித்த புகாரின் சான்றிட்ட நகல் என்றால் அது எனது தரப்பு ஆவணங்கைள பார்த்து தான் சொல்ல முடியும். வா.த.சா.ஆ 6 ஆனது

தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்ட போது எனது தரப்பிலோ எனது வழக்கறிஞர் தரப்பிலோ ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் ஆமாம். வா.த.சா.ஆ 5 ல் நான் 6 மாததிற்கு முன்னரே நிறுவனத்திற்கான கணக்கு வழக்குகளை பார்க்க தொடங்கிவிட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் நான் அவ்வாறு புகாரே அளிக்கவில்லை. அசல் வழக்கு எண் 470/18 ல் பிரதிவாதிகள் அசல் வழக்கு எண் 250/17 ல் வாதிகள் என்றால் ஆமாம். அசல் வழக்கு எண் 470/18 ல் 3ம் வாதியின் ஜனவரி 2008 முதல் 31.3.2012 வரைக்கான அனைத்து வகை கணக்குகள் குறித்தும் இருப்பு நிலை ஐ.டி ரிட்டன்ஸ் 1ம் வாதியும் 1ம் பிரதிவாதியும் ஒருமித்த கருத்துடன் அமர்ந்து பேசி முடித்துக்கொண்டனர் என 1ம் பிரதிவாதி மேற்படி வழக்கில் பதில் உரைத்துள்ளதை நான் எனது பிரமாண வாக்கு மூலத்தில் மறுக்கவில்லை என்றால் சரியல்ல.

8. சேது சுப்பிரமணியம் என்ற ஆடிட்டர் கூட்டாண்மை ஒப்பந்த பத்திரத்தில் ஒரு Aarbitrator என்றால் இல்லை. அவர் சார்டர் அக்கௌண்டன்ட் என்றால் அது தெரியவில்லை. என்னுடைய மனைவி 1ம் பிரதிவாதிக்கு தெரியுமா என்றால் அவருக்கும் தெரியாது. எனது மனைவியும் 1ம் வாதியும் சேர்ந்து தான் நியமித்தார்கள் என்றாலும் தற்போது வழக்கிற்காக தெரியவில்லை என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது வழக்குரையிலும் எதிர் வழக்குரையிலும் பிரமாண வாக்கு மூலத்திலும் ஆடிட்டரிடம் கூட்டாண்மை நிறுவனத்தின் கணக்குகளை கேட்டதாகவும் அவர் ஒப்படைக்க மறுத்தாக சொல்லியுள்ளது பொய்யானது என்றால் சரியல்ல. வா.த.சா 7 ன் படி எனது மனைவி 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதி நிறுவனத்தின் மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள விவரங்களை கேட்டுள்ளார் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ 8 ன் படி ஏப்ரல் 2014 ல் 3ம் பிரதிவாதி நிறுவனத்தின் ஆடிட்டர் எனது மனைவி வா.த.சா.ஆ 7 யை கேட்ட விவரங்களை கொடுத்து விட்டார் என்றால் முதலில் தரவில்லை 2–3 முறை கேட்ட பிறகு தந்தார்.

9. 3ம் பிரதிவாதி நிறுவனத்தின் கணக்கு வழக்குகள் எல்லாமே பங்குதாரர்என்ற முறையில்எனது மனைவிக்கு எல்லா விவரமும் தெரியும் என்றாலும் அதனாலேயே 30.9.2013 ல் 1.4.2012 முதல் 31.3.2013 வரைக்கான ஐ.டி.யை ரிட்டனை தயார்செய்து விட்டார் என்றாலும் சரியல்ல. வா.த.சா.ஆ 8 நான் ஆடிட்டரிடம் கையெழுத்து போட்டு

வாங்கிய ஆவணம் என்றால் என்னுடையது தான். அதில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை நான் தான் பெற்றுள்ளேன் என்றால் இல்லை என்னுடைய மனைவி பெற்றுள்ளார். 2012–13 க்கான வருமான வரி கணக்கை ஆடிட்டர் கொடுத்தார் என சொல்லியிருப்பது பொய்யானது என்றாலும் 2008 முதல் 31.3.2012 வரை (Relates to Assesment Year 2012–13) கொடுத்தார் என்பது சரி என்றால் ஆமாம்.

10. என்னுடைய பிரமாண வாக்கு மூலத்தில் 3ம் பிரதிவாதி நிறுவன உற்பத்திக்கு தேவையான மூல பொருட்களை இந்த வாதிகள் பல நபர்களிடம் பெற்று அதற்கான தொகையை கொடுக்காத நிலையில் நான் என் கணக்கிலிருந்து அந்ததொகையை கொடுத்தேன் என சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல. என்னுடைய கணக்கிலிருந்து யார் யாருக்கு எவ்வளவு கொடுத்தேன் என்ற விவரத்தை எதிர் வழக்குரையிலும் என்னுடைய முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

M MEKALA MYTHILI
Digitally signed by M MEKALA MYTHILI
Date: 2023.02.27 17:52:12 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.